**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**இளங்கலை சட்டமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு திட்டம்**

**இறுதிப் பரீட்சை – 2022/23**

**LLU3601 – இலங்கையின் சட்டமுறைமையும் சட்டவரலாறும்**

---

திகதி: 22.02.2024 காலம்: மு.ப.9.30 – பி.ப 12.30

---

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை 08**

**ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

**தெளிவற்ற கையெழுத்துக்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. "உரோமன் டச்சு சட்டத்தின் அறிமுகம், அதுவாகவே முக்கியத்துவம் வாய்ந்தது. வழக்காற்றுச் சட்டத்தின் பல்வேறு முறைமைகளின் கோவையானது எதிர்கால சந்ததியினருக்கான மாதிரியை அமைத்தது, மேலும் அவ்வாறான மாதிரியை அமைத்தலானது இலங்கை சட்ட முறைமையில் உரோமன் டச்சு சட்டத்தின் அடிப்படை மேலாதிக்கத்தையும் நிறுவியது. ஆனால் ஆங்கிலேயருக்கு இந்த சட்டக் கலவைக்கு இறுதி மூலப் பொருளை சேர்க்க வேண்டியிருந்தது."

George C. Cameron, *'Sri Lanka's Legal System: Museum of Antiquities or Melting- Pot of Ideas?*

மேற்தரப்பட்ட கூற்றின் பிண்ணனியில் உரோமன் டச்சு சட்டத்தின் அறிமுகம் மற்றும் அங்கீகாரம் மற்றும் இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின் கீழ் அதன் நடைமுறையினையும் ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. "சட்ட இயற்றங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பயன்பாடு மற்றும் வழக்கு செயற்பாட்டின் கிட்டத்தட்ட புலப்படாத பரிணாமத்தின் ஊடாக, பிரித்தானியர்கள் இலங்கையின் சட்டத்தினை மீளவடிவமைத்து, அதன் வழக்கற்றுப் போன கூறுகளை நீக்கி, புதிய சிக்கல்களை சந்திக்கும் வகையில் மாற்றியமைத்தனர்."

U. Egalahewa, *Commercial Law of Sri Lanka: Applicability of Laws in England*, 2020

மேற்தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கைக்குள் சட்டவாக்கத்தின் ஊடாக ஆங்கிலச் சட்டம் எவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

03. சோமசுந்தரம் 1980 இல் பிறந்ததோடு அவனது பெற்றோர் யாழ்ப்பாணத் தமிழர்களாவர். அவன் தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணத்தின் தேசிய இந்துக் கல்லூரியில் கற்றதோடு தனது இரண்டாம் நிலைக் கல்விக்காக கொழும்பிலுள்ள தேஸ்டன் கல்லூரிக்கும் சென்றான். அவனது பாடசாலைக் கல்விக்குப் பிறகு, களனிப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்கு தனது மேற்படிப்பினையும் பூர்த்தி செய்தான். பின்னர், கடுவலவில் உள்ள பிரதேச செயலகத்தில் ஓர் உதவி செயலாளராக சிவில் சேவையில் இணைந்தான். 2005 இல், அதே பிரதேச செயலகத்தின் ஊழியர் ஒருவரான அம்பிகா என்பவளை திருமணம் செய்தான். அம்பிகா யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டதோடு அவளது பெற்றோரும் யாழ்ப்பாணத் தமிழர்களாவர். திருமணத்திற்குப் பிறகு, அவர்கள் மாலபேயிலுள்ள வாடகை வீடொன்றில் வசித்தனர். அவர்களுக்கு ஷர்மா எனும் பிள்ளையொன்றும் உள்ளது. 2015 ஆம் ஆண்டு அம்பிகா தனது வேலையிலிருந்து இராஜினாமா செய்ததுடன், ஷர்மாவுடன் யாழ்ப்பாணம் சென்று சோமசுந்தரத்தின் பெற்றோருடன் வசித்தாள். சோமசுந்தரம் தொடர்ந்தும் கடுவலவின் பிரதேச செயலகத்தில் வேலை செய்ததுடன், மாலபேயில் வசித்து வந்தான். ஒவ்வொரு மாதமும், சில நாட்கள் அம்பிகா, ஷர்மா மற்றும் தனது பெற்றோருடன் தங்குவதற்காக யாழ்ப்பாணம் சென்று வந்தார். 2020 ஆம் ஆண்டு சோமசுந்தரம் கிளிநொச்சியில் ஒரு புதிய வீட்டைக் கட்டியதுடன் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெறுவதற்கும் திட்டமிட்டிருந்தார். மேலதிகமாக, பல்கடைத்தொகுதி ஒன்றினை நிர்மாணம் செய்யக் கருதி கிளிநொச்சியில் இன்னுமொரு காணித் துண்டொன்றினையும் வாங்கியிருந்தார். 2022 ஆம் ஆண்டு யாழ்பாணத்துக்குப் பயணம் செய்து கொண்டிருந்த போது சோமசுந்தரம் குருணாகலவில் ஏற்பட்ட வாகன விபத்தில் திடீரென இறந்து போனார்.

அம்பிகா சோமசுந்தரம் தேசவழமை சட்டத்தினாலா அல்லது பொதுச் சட்டத்தினாலா ஆளப்படுவார் என்பது தொடர்பாக உமது ஆலோசனையை நாடுகிறாள்.

அம்பிகாவிற்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

04. ரன்பண்டா மற்றும் பிசோமெனிகா ஆகியோர் மரபு ரீதியாக கண்டியர்கள் என்பதுடன், 1930 ஆம் ஆண்டு கண்டியில் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு கமல் மற்றும் மாலனி என இரண்டு பிள்ளைகள் உள்ளனர். மாலனி 1950 ஆம் ஆண்டு கீழ் நாட்டு சிங்களவரான சுனிலை பின்ன முறை மூலம் திருமணம் செய்து கொண்டாள், அவர்களுக்கு அமாலி எனும் பிள்ளையொன்றும் உள்ளது. கமல் 1954 ஆம் ஆண்டு பாணந்துறையைச் சேர்ந்த சஜினி என்பவளை திருமணம் செய்ததுடன் அவர்களுக்கு சமந்த எனும் பிள்யொன்றும் உள்ளது.

மேலுள்ள நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு திறத்தவருக்கும் ஏற்புடையதாகும் சட்டத்தினை ஆராய்க. உமது விடையினை பொருத்தமான தீர்ப்புச் சட்டம் மற்றும் நியதிச்சட்டப் பிரிவுகளைக் கொண்டு ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

05. கீழ்தரப்பட்ட வழக்குகளில் முஸ்லிம் சட்டத்தின் வேறுபட்ட அம்சங்கள் தீர்மானிக்கப்பட்ட விதத்தை மதிப்பீடு செய்க.

I. *Queen Vs. Obeysekara* (1889) 9.S.C.C.11
II. *Attorney General Vs. Reid* (1964) 65 NLR 97
III. *Abeysendere Vs. Abeysundere* (1998) 1 SLR 185

IV. *Faiz Mohamed Vs. Else Fathumma* (1942) 44 NLR 574

(4 X 5= 20 புள்ளிகள்)

06. இலங்கை பல்லின, பல மத, பல் கலாசார சமூகத்தைக் கொண்ட நாடாகும். இது பெரும்பாலும் வெவ்வேறு தனியார் சட்டங்களின் முரண்பட்ட நியமங்களுடன் தொடர்புடைய ஒரு பன்மைத்துவ சட்ட முறைமையினை உருவாக்கியுள்ளது. இலங்கையின் பல்வேறு தனியார் சட்டங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைக் குறைக்கும் வகையில் சட்ட சீர்திருத்தங்களைத் தொடர்வதை நோக்கமாகக் கொண்ட வலுவான வாதம் உள்ளது.

இலங்கையின் தனியார் சட்டங்களில் அத்தகைய முரண்படும் நியமங்களின் மூன்று பகுதிகளைக் கண்டறிந்து, அத்தகைய முரண்பாடுகளைக் குறைப்பதற்கு சாத்தியமான சட்ட சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்க.

(20 புள்ளிகள்)

07. நீர் இலங்கையின் காலணித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்த நீதித்துறை நியாயசபைகள் மற்றும் நீதித்துறை அதிகாரிகள் பற்றிய அறிக்கையை தயாரிப்பதற்கான குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளீர் எனக் கருதுக.

தேவைப்பட்ட இடங்களில் இயைபான எடுத்துக்காட்டுக்கள் உள்ளடங்கலாக உமது அறிக்கையினை தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

08. **(I)** இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழான நீதிமன்ற முறைமையின் பதவணியினை அடையாளங் கண்டு, ஒவ்வொரு நீதிமன்றத்தினுயை அதிகாரங்களையும் சுருக்கமாக மதிப்பீடு செய்க.

(10 புள்ளிகள்)

**(II)** இலங்கையில் நீதித்துறை எதிர்கொள்ளும் சமகால சவால்கள் யாவை? இலங்கையின் நீதிமுறை நிர்வாகத்தை எவ்வாறு மேம்படுத்த முடியும்? ஆராய்க.

(10 புள்ளிகள்)

*-முழுப் பதிப்புரிமை பெற்றது-*